**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC 717/2021**

**Prosecution witness : அ.சா.10** **Date : 20.10.2023**

| | |
|---|---|
| **Name : பிரசாத்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது மேட்டூர் அரசு மருத்துவமனை முதுநிலை உதவி மருத்துவராக உள்ளேன். கடந்த 06.02.2022 ம் தேதி இரவு 09.30 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.பழனிசாமி வயது 45 என்பவரை ஆம்புலன்ஸ் டிரைவர் சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) என்னிடம் ஆம்புலன்ஸ் டிரைவர் கடந்த 06.02.2022-ம் தேதி இரவு 9 மணிளவில் மேட்டூர் ஆர்.எஸ் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் அருகே இருசக்கர வாகனத்தில் செல்லும் போது, லாரி மோதியதாக கூறினார். அவர் சுயநினைவு இல்லாமல் மயங்கிய நிலையில் இருந்தார். அவருக்கு நான் முதலுதவி சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) வலது பக்க காலில் 2 எலும்புகளும் முறிந்த நிலையில் இருந்தது.

2) 6*2*2 செ.மீ அளவுடைய கிழிந்த காயம் உள்பக்க தாடையில் இருந்தது.

3) 3*1*1 செ.மீ அளவிலான கிழிந்த காயம் மேல்பக்க உதட்டில் இருந்தது.

4) 2*1*0.5 செ.மீ அளவிலான கிழிந்த காயம் கீழ் உதட்டில் இருந்தது.

5) 4*1*1 செ.மீ அளவிலான கிழிந்த காயம் முன்பக்க தலையில் இருந்தது.

6) 2*0.5*0.5 செ.மீ அளவிலான கிழிந்த காயம் வலது புருவத்தில் இருந்தது.

7) 4*2*0.5 செ.மீ அளவிலான கிழிந்த காயம்வலது காலின் கிழ் பக்கத்தில்

இருந்தது.

8) 5*3 செ.மீ அளவிலான சிறாயப்பு காயம் வலது முட்டியின் கீழ் பக்கம் இருந்தது.

9) அவரது மூச்சு காற்றில் மதுவின் துர்நாற்றம் வீசியது. அனைத்து முதலுதவியும் முடிந்தபின்பு மேல் சிகிச்சைக்காக 108 வாகனத்தில் சேலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். **விபத்து பதிவேடு அ.சா.ஆ.3.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**